## <u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தாட்கோ - 2022-2023-ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் 40 இடங்களில் தலா ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்துதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி)துறை</u>

அரசாணை (நிலை) எண். 68 நாள்:20.08.2022

சுபகிருது வருடம், ஆவணி 4 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053
படிக்கப்பட்டது:-

தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடித
எண்.ஜி1/1952/2022, நாள்.27.05.2022 மற்றும் 18.07.2022.

*******

ஆணை:-

2022-2023-ஆம் ஆண்டிற்கான துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால், கீழ்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**" 2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் பயன்பெறும் வகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க வாய்ப்புள்ள மாவட்டங்களில், தலா 50 உறுப்பினர்களைக் கொண்ட 40 புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப்படும். அச்சங்கங்களுக்குத் தேவைப்படும் பால் குவளைகள் (Milk Cans), பரிசோதனை உபகரணங்கள் மற்றும் பதிவேடுகள் வாங்க தலா ரூ.1.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் உதவித்தொகை வழங்கப்படும்."**

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவில், மகளிர் ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியினர் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் குறைவான எண்ணிக்கையில் உள்ள மாவட்டங்கள் மற்றும் சங்கங்கள் இல்லாத மாவட்டங்களில் பால் உற்பத்தி உள்ள பகுதிகளில் புதிய பால் உற்பத்தியாளர் சங்கம் அமைக்க முதற்கட்டமாக 40 இடங்களில் தலா 50 உறுப்பினர்கள் கொண்ட 40 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.40.00 இலட்சம் நிதியுதவி வழங்கவும், இத்தொகையை சங்கத்திற்கு தேவையான பதிவேடு புத்தகம், பரிசோதனை உபகரணம் மற்றும் கேன்கள் வாங்க பயன்படுத்தப்படலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3. மேலும், இத்திட்டத்தின் மூலம் 1800 (36X50 உறுப்பினர்கள்) ஆதிதிராவிட மகளிர் பயனடைய ஏதுவாக ரூ.36.00 இலட்சம் SCA to SCSP நிதியிலிருந்தும், 200 (4X50உறுப்பினர்கள்) பழங்குடியின மகளிர் பயனடைய ரூ.4.00 இலட்சம், மாநில அரசு (CTDP நிதியில்) நிதியிலிருந்தும் பெறுவதற்கான நிதி ஒப்புதல் வழங்குமாறும், மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்திட தேவையான வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்துக்கொள்ள அனுமதி அளிக்குமாறும் தாட்கோ, மேலாண்மைஇயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, அதிக அளவில் கறவைமாடு வளர்ப்புத்தொழிலை நம்பியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர்களுக்கு தனியாக பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உருவாக்கி அவர்களின் வாழ்க்கைத்தரம் மேன்மை அடையும் வகையில், முதற்கட்டமாக இணைப்பு-I இல் உள்ள மாவட்டங்களில் தலா 50 உறுப்பினர்கள் கொண்ட 40 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்திடவும், அவற்றில் 1800 (50 உறுப்பினர் x 36 கூட்டுறவு சங்கங்கள் = 1800 உறுப்பினர்கள்) ஆதிதிராவிட மகளிர் பயனடைய ஏதுவாக ரூ.36.00 இலட்சம் (36 கூட்டுறவு சங்கங்களுக்கு தலா ரூ.1 இலட்சம்) SCA to SCSP நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், 200 ( 50 உறுப்பினர் x 4 கூட்டுறவு சங்கங்கள் = 200 உறுப்பினர்கள்) பழங்குடியினர் மகளிர் பயனடைய ரூ.4.00 இலட்சம் (4 கூட்டுறவு சங்கங்களுக்கு தலா ரூ.1 இலட்சம்) மாநில அரசு (CTDP நிதியில்) நிதியிலிருந்து பெறுவதற்கான நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் 1800 ஆதிதிராவிடர் மகளிர் பயனடையும் வண்ணம் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.36 இலட்சத்தை (ரூபாய் முப்பத்தாறு இலட்சம் மட்டும்) ஒன்றிய அரசின் PMAJAY (SCA to SCSP) திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

6. மேலே பத்தி-4-இல் 200 பழங்குடியின மகளிர் பயனடையும் விதமாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.4.00 இலட்சத்தை (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

**"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 309 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை."**

**(த.தொ.கு.2225 02 796 JY 30901)"**

7. மேலே பத்தி 4-இல் மாநில அரசு நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை, பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை, தாட்கோ மூலம் செயல்படுத்த ஏதுவாக இத்தொகையினைப் பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் கீழ்க்காணும் அலுவலக பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக (Contra Credit) வரவு வைப்பதற்கு பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது.

**" K வைப்புத் தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443-00-உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத் தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள்."**
**(த.தொ.கு.8443 00 800BY 000G) (Receipt)**
**(த.தொ.கு.8443 00 800 BY 0004) (Outgo)**

8. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர்/பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்த இணைப்பு-II-இல் உள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை வெளியிடுவதற்கு அரசு ஆணை(நிலை)எண்.519, நிதி(சம்பளம்)துறை, நாள்.29.09.1997-இன்படி நிதித்துறையின் இசைவு தேவையில்லை.

//ஆளுநரின் ஆணைப்படி//

T.S. ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் , ஆதி திராவிடர் நலம், சென்னை-5
இயக்குநர் ,பழங்குடியினர் நலம், சென்னை- 5
மேலாண்மை , இயக்குநர் , தாட்கோ , சென்னை -18,
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ,
(இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் வழியாக)
அனைத்து மாவட்ட மேலாளார் , தாட்கோ.
(மேலாண்மை இயக்குநர் தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர் ,சென்னை 18/35
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் , சென்னை -5/8/9
மாவட்ட திட்ட அலுவலர் ,( பழங்குடியினர் நலம்)

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் ,சென்னை-9
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர் , சென்னை -9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.
நிதி (ஆதி (ம )பந) த்துறை , சென்னை -9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
(அநமு -1 / ஆதிந-5 / ப.மே 1) த் துறை ,சென்னை-9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/8/2022
பிரிவு அலுவலர்

20/8/22

## இணைப்பு-I

**அரசாணை(நிலை)எண். 68, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்(சிஉ_தி)துறை, நாள்.20.08.2022.**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்

ஆவின் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பால் வழங்க 36 மாவட்டங்களில் (சென்னை மற்றும் கன்னியாகுமரி நீங்கலாக) அமைக்கப்படும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ.1 இலட்சம் பங்கு மூலதனம்.

| வ. எண் | மாவட்டம் | SC | | ST | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மானியம் (ரூ. இலட்சம்) | எண்ணிக்கை | மானியம் (ரூ. இலட்சம்) |
| 1 | அரியலூர் | 1 | 1.00 | | |
| 2 | செங்கல்பட்டு | 1 | 1.00 | | |
| 3 | சென்னை | - | - | | |
| 4 | கோயம்புத்தூர் | 1 | 1.00 | | |
| 5 | கடலூர் | 1 | 1.00 | | |
| 6 | தருமபுரி | 1 | 1.00 | | |
| 7 | திண்டுக்கல் | 1 | 1.00 | | |
| 8 | ஈரோடு | 1 | 1.00 | | |
| 9 | கள்ளக்குறிச்சி | 1 | 1.00 | | |
| 10 | காஞ்சிபுரம் | 1 | 1.00 | | |
| 11 | கன்னியாகுமரி | - | - | | |
| 12 | கரூர் | 1 | 1.00 | | |
| 13 | கிருஷ்ணகிரி | 1 | 1.00 | | |
| 14 | மதுரை | 1 | 1.00 | | |
| 15 | மயிலாடுதுரை | 1 | 1.00 | | |
| 16 | நாகப்பட்டினம் | 1 | 1.00 | | |
| 17 | நாமக்கல் | 1 | 1.00 | 1 | 1.00 |
| 18 | பெரம்பலூர் | 1 | 1.00 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | புதுக்கோட்டை | 1 | 1.00 | | |
| 20 | இராமநாதபுரம் | 1 | 1.00 | | |
| 21 | இராணிப்பேட்டை | 1 | 1.00 | | |
| 22 | சேலம் | 1 | 1.00 | 1 | 1.00 |
| 23 | சிவகங்கை | 1 | 1.00 | | |
| 24 | தென்காசி | 1 | 1.00 | | |
| 25 | தஞ்சாவூர் | 1 | 1.00 | | |
| 26 | நீலகிரி | 1 | 1.00 | 1 | 1.00 |
| 27 | தேனி | 1 | 1.00 | | |
| 28 | தூத்துக்குடி | 1 | 1.00 | | |
| 29 | திருநெல்வேலி | 1 | 1.00 | | |
| 30 | திருப்பத்தூர் | 1 | 1.00 | | |
| 31 | திருப்பூர் | 1 | 1.00 | | |
| 32 | திருவள்ளூர் | 1 | 1.00 | | |
| 33 | திருவண்ணாமலை | 1 | 1.00 | | |
| 34 | திருவாரூர் | 1 | 1.00 | | |
| 35 | திருச்சிராப்பள்ளி | 1 | 1.00 | | |
| 36 | வேலூர் | 1 | 1.00 | | |
| 37 | விழுப்புரம் | 1 | 1.00 | 1 | 1.00 |
| 38 | விருதுநகர் | 1 | 1.00 | | |
| | மொத்தம் | 36 | 36.00 | 4 | 4.00 |

T.S. ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல்//

சி. [signature] 20/8/2022
பிரிவு அலுவலர்.

[initials] 20/8/22

## இணைப்பு-II

**அரசாணை(நிலை)எண். 68, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்(சிஉதி)துறை, நாள்.20.08.2022.**

## வழிகாட்டி நெறிமுறைகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்திட வழிகாட்டி நெறிமுறைகள்.

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க ஒரு சங்கத்திற்கு ரூ. 1.00 இலட்சம் நிதி விடுவிக்கப்படும்.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக்கப்படுவர்.
- சம்பந்தப்பட்ட மாவட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களால் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க உரிய முன் மொழிவு பெறப்பட்ட 4 மாத காலத்திற்குள் சங்கத்தை பதிவு செய்ய மாவட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- சங்க உறுப்பினர்கள் மூலமாக பெறப்படும் பாலின் அளவு சங்கத்தில் பரிசோதனை செய்யப்பட்டு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- மகளிர் குழுக்கள் அதிகம் பயன்பெற்ற கிராமங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்காண் நிதி பின்வருமாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும்.

| வ.எண் | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | பால் பரிசோதனை கருவி கொள்முதல் | ரூ.40,000 |
| 2 | துருவுறா பால் கேன்கள்(எவர்சில்வர்) கொள்முதல் (ரூ 6000/- வீதம் 5 கேன்கள் ) | ரூ.30,000 |
| 3 | பணியாளர் சம்பளம் (ரூ 2400/- வீதம் 12 மாதங்களுக்கு) | ரூ.28,800 |
| 4 | புத்தகம் மற்றும் படிவங்கள் கொள்முதல் | ரூ.1,200 |
| | **கூடுதல்** | **ரூ.1,00,000** |

மேற்காண் நிதி உதவி பெற மாவட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்கள் மூலம் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழுவிற்கு முன்மொழிவு அனுப்பப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக இருத்தல் வேண்டும்.
2. வயது வரம்பு 18 முதல் 65 வயது வரை இருக்க வேண்டும்.
3. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரர் தாட்கோ திட்டத்தின் கீழ் மானியம் பெற்றிருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.
5. சங்க உறுப்பினர் குறைந்தபட்சம் 1 கறவை மாடாவது வைத்திருக்க வேண்டும்.

**விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் முறை:**

கீழ்கண்ட அலுவலர்களை கொண்டு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, விண்ணப்பதாரர்களை தேர்வு செய்யும்.

| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
|---|---|
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் மற்றும் உறுப்பினர் |
| இணை இயக்குனர், கால்நடை மருத்துவர் துறை | உறுப்பினர் |
| மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| துணைப் பதிவாளர் (பால் வளம்) | உறுப்பினர் |

T.S. ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல்//

சி. சிவகொழுந்து 20/8/2022
பிரிவு அலுவலர்.

20/8/22